1979 அக்டோபர் 27]

கிளர்ச்சிகளில் ஈடுபடுவது தவிர்க்க முடியாததாக ஆகிடவுமான இந்த அமைச்சரவையின் கொள்கைக்கு இப்பேரவை எதிர்ப்பு தெரிவிக்கிறது.''

என்ற இந்த கண்டனத் தீர்மானத்தை நான் முன் மொழிகிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இதை நான் வழிமொழிகிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேராசிரியர் திரு, அன்பழகன் அவர்கள் பேசுவதற்கு முன் அவைக்கு ஓர் அறிவிப்பு.

(2) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

உ பேரவையின் அலுவல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

20—10—1979 அன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவிற்கிணங்க பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டவாறு நடைபெறும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்:—

27—10—1979.. (சனிக்கிழமை)	1 1979-80 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதி நிலை அறிக்கையை அளித்தல். 2 மற்ற அலுவல்கள்—அரசின் ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம்.
28—10—1979.. (ஞாயிறு)	விடுமுறை.
29—10—1979.. (திங்கள்)	காலையும் மாலையும் பேரவை கூடும் அரசின் ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம்-மேலும் விவாதம்.
30—10—1979.. (செவ்வாய்)	1. கேள்வி நேரம் இல்லை. 2. அரசின் ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானத்தின் மீது மேலும் விவாதம்—29 ஆம் தேதி விவாதம் முடிவுறாவிட்டால் 3. 1979-80 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கை மீது விவாதமும் வாக்கெடுப்பும். 4. மேற்படி நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல்.

31—10—1979 .. (புதன்) 1. 1979-80 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கை மீது விவாதமும் வாக்கெடுப்பும்—30 ஆம் தேதி விவாதம் முடிவுறாவிட்டால்.
2. மேற்படி நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு.
3. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

1—11—1979 .. (வியாழன்) பக்ரீத்—விடுமுறை.

2—11—1979 .. (வெள்ளி) 1. நிதிஒதுக்க சட்ட முன்வடிவு—31 ஆம் தேதி நிறைவேற்றப்படாவிட்டால்.
2. அரசினர் சட்டமுன்வடிவுகள்.

3—11—1979 .. (சனி) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

4—11—1979 .. (ஞாயிறு) விடுமுறை.

5—11—1979 .. (திங்கள்) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

6—11—1979 .. (செவ்வாய்) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

தேவையிருப்பின், பின்வரும் நாட்களுக்கான அலுவல்கள் குறித்துப் பிறகு முடிவு செய்யப்படும்.

பேரவை, வழக்கம்போல் காலை 9 மணி முதல் கூடும்.

(5) அமைச்சரவையின் கொள்கையை நிராகரிக்கும் தீர்மானம்—விவாதம்—தொடர்ச்சி.

* திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் மீது கண்டனம் தெரிவிக்கின்ற இந்தத் தீர்மானத்தை நான் இங்கே முன்மொழிந்து பேசுகிற இந்த வாய்ப்பு கிடைத்த நேரத்தில் பல்வேறு கண்டனத் தீர்மானங்கள் வெவ்வேறு கட்சிகளின் சார்பில் இந்த மன்றத்தில் தரப்பட்டிருக்கின்றன என்பதையும் இந்தக் கண்டனத் தீர்மானங்களை படித்த போது அந்தக் கண்டனத் தீர்மானங்களில் வருகிற கருத்துக்களின் சாரமாகத்தான் என்னுடைய கண்டனத் தீர்மானம் முன்மொழியப்பட்டிருக்கிறது என்பதையும் நான் நினைவூட்ட விரும்புகிறேன்.